# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்பு கல்விமாணித் தேர்வு – 2013/2014 (ஜுன்/ஜுலை - 2017)

## EDS - 2223 பிள்ளை வளர்ச்சியும் கற்றலும் (Child Growth and Study)

நேரம்: 03 மணித்தியாலங்கள்

பகுதி ஒன்றில் விரும்பிய இரு வினாக்களுக்கும் பகுதி இரண்டில் விரும்பிய மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.

---

### பகுதி – I

01. அ) விருத்தி = வளர்ச்சி + கற்றல் என்ற அடிப்படையில் பிள்ளை விருத்தியடையும்போது விருத்தியுடன் தோன்றும் பண்புகள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றினை சுருக்கமாக விளக்குக? (6 புள்ளிகள்)

ஆ) பிள்ளை விருத்தி பற்றிய சூழல்சார் கற்றல் கொள்கையின் முக்கியத்துவத்தை நடத்தை வாதியான ஜே.பி. வாட்சனின் கருத்துக்களுடன் ஒப்பிட்டு ஆராய்க? (8 புள்ளிகள்)

02. அ) சிக்மன் புராய்ட் குறிப்பிடும் பிள்ளை விருத்தியின் ஐந்து முக்கிய உள பாலியல் கட்டங்களையும் குறிப்பிட்டு அவற்றினை சுருக்கமாக விளக்குக? (8 புள்ளிகள்)

ஆ) பிள்ளையின் ஆளுமை, நுண்ணறிவு விருத்திகளில் பரம்பரை எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது என்பதனை தெளிவுபடுத்துக? (6 புள்ளிகள்)

03. அ) "வளர்ச்சி, முதிர்ச்சி, கற்றல் ஆகிய உடல் தொழிற்பாடுகள் சூழல், பரம்பரை ஆகிய காரணிகளை அடிப்படையாக கொண்டன" பிள்ளை விருத்தியில் இவை எவ்வாறான இடைத்தொடர்புகளை கொண்டுள்ளன என்பதனை விளக்குக? (8 புள்ளிகள்)

ஆ) பிள்ளையின் கற்றலுக்கான ஆயத்த நிலையானது கற்றல் செயற்பாடுகள் வெற்றியளிப்பதற்கு எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றன்? என்பதை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக? (6 புள்ளிகள்)

### பகுதி II

04. அ) பிறப்பிற்கு முன்னான விருத்தி நிலைகளில் கருக்கொள்ளலின் பின்பு உட்பதிக்கப்பட்ட நாளிலிருந்து எட்டு வாரங்கள் வரையான காலப்பகுதியினுள் ஏற்படும் முக்கிய செயற்பாடுகள் பற்றி எடுத்துரைக்குக?

ஆ) முதிர் மூலவுருப்பருவக்காலத்தில் ஒவ்வொரு மாதமும் இடம் பெறுகின்ற குறிப்பான விரு நிலைகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக? (8 புள்ளி

இ) ''முதிர் மூலவுருவில் பிறப்புரிமையின் செல்வாக்குக் காரணமாக ஏற்படும் குறைபாடுக தவறான அல்லது பூரணமற்ற பால் நிறமூர்த்தப் பிரிகையினால் ஏற்படும் குறைப கிளின்பெல்டர் குறைபாடு (kilnefelter's syndrome) எனப்படுகின்றது.'' இக்குறைபாடு எவ் ஏற்படுகின்றது என்பதனை தெளிவுபடுத்துக? (8 புள்ளி

05. அ) குழந்தைப்பருவத்தில் இரு வருடகாலப்பிள்ளைகளின் இயக்கத்திறன் வளர்ச் எட்டுதல் - உணர்தல், நடத்தல் என்னும் தோற்றப்பாடுகள் எவ்வாறு ஒருங்கிசைகின்றன என் தொடர்பாக கருத்துரைக்குக? (12 புள்ளி

ஆ) பிள்ளை வளர்ப்பு நடைமுறைகளைத் தீர்மானிப்பதில் பெற்றோரின் நடத்தையுடன் பரிமாணங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.




இவ்விரு பரிமாணங்களையும் பெற்றோருடன் தொடர்புபடுத்தி விளக்குக? (12 புள்ளி

06. அ) மனவெழுச்சி என்றால் என்ன? என்பதனை தெளிவுபடுத்தி, மனவெழுச்சி பற்றி புலோ (1985) கூறிய உடல் மாற்றம் (அக ரீதியான துலங்கள்), உளவியல் மாற்றம் (அறிவு சா எதிர்த்தாக்கம்) என்பன பற்றி விஞ்ஞான ரீதியான விளக்கம் தருக? (12 புள்ளி

ஆ) நீங்கள் சமூகமளித்த முன்பள்ளியை ஆதாரமாகக் கொண்டு பாடசாலைப் நிலைப்பிள்ளைகளிடத்தே எழுகின்ற எதிர் மறையான மனவெழுச்சிப்பண்புகளை முன் ஆசிரியரொருவர் எவ்வாறு கற்றலுக்கு சாதகமாகப் பயன்படுத்துகின்றார் என்பதனை ஆரா

(12 புள்ளி

07. அ) ஆளுமை விருத்தி பற்றிய அணுகு முறைகளுள் உயிரியல் அணுகுமுறை, சமூகக் அணுகுமுறை போன்றவற்றைச் சுருக்கமாக ஆராய்க? (12 புள்

ஆ) எரிக் எரிக்சனினால் முன்வைக்கப்பட்ட குழந்தை பிறந்ததிலிருந்து 41 வயது வரை விருத்திப் பரம்பலின் எட்டு (8) நிலைகளிலும் விருத்தி செய்யப்படும் அகப்பண் நடவடிக்கைகள் தொடர்பாக சுருக்கமாக விளக்குக? (12 புள்